செ.வெ.எண்: 445/2019 நாள்: 16.9.2019

**திருவண்ணாமலை நகராட்சியில் தூய்மை பாரத திட்டத்தின் கீழ் ரூ.84.00 இலட்சம் மதிப்பீட்டில் பேட்டரியால் இயக்கப்படும் 60 புதிய வாகனங்கள் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்...**

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை நகராட்சி, ஈசான்ய மைதானத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக 2018-2019 ஆம் ஆண்டு தூய்மை பாரத திட்டத்தின் கீழ் ரூ.84.00 இலட்சம் மதிப்பீட்டில் பேட்டரி மூலம் இயக்கப்படும் 60 புதிய வாகனங்களை பொதுமக்களின் பயன்பாட்டுக்கு மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியப் பெருந்தலைவர் திரு. அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி, திருவண்ணாமலை நகராட்சி ஆணையாளர் (பொறுப்பு) திரு. சுரேந்தர், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைத் தலைவர் திரு. வக்கீல் கே. சங்கர், முன்னாள் அமைச்சர் திரு. எஸ். ராமச்சந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. ஆர். வனரோஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. சுரேஷ்குமார், அரசு அலுவலர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள், முன்னாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை நகராட்சிக்கு உட்பட்ட 39 வார்டு பகுதிகளில் மொத்தம் 33,000 வீடுகள் உள்ளன. இந்த வார்டு பகுதிகளில் ஏற்கனவே 100 தள்ளு வண்டிகள் மூலம் வீடு, வீடாகச் சென்று தினமும் குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. தற்போது, திருவண்ணாமலை நகராட்சிக்கு தூய்மை பாரத திட்டத்தின் கீழ் 2018-2019 ஆம் ஆண்டு முற்றிலும் பேட்டரி மூலம் இயக்கப்படும் 60 புதிய குப்பை சேகரிக்கும் வாகனங்கள் ரூ.84.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்பட்டுள்ளது. ஒரு வாகனத்தில் 4 பேட்டரிக்கள் பொருத்தப்பட்டு, 6 குப்பை தொட்டிகள் (3 மக்கும் குப்பை, 3 மக்காத குப்பை) குப்பைகள் சேகரிக்க வைக்கப்பட்டுள்ளது. திருவண்ணாமலை நகராட்சி பகுதியில் வீடு, வீடாகச் சென்று 60 பேட்டரி வாகனங்கள் மூலம் ஒரு வாகனத்திற்கு 2 தூய்மை பணியாளர்கள் வீதம் மொத்தம் 120 தூய்மை பணியாளர்கள் தினமும் காலை 06.00 மணி முதல் 11.00 மணி வரை குப்பைகள் சேகரிக்கும் பணியில் ஈடுபடுவார்கள். இந்த பேட்டரி வாகனங்கள் மூலம் குப்பைகள் சேகரிக்கும் பணியாளர்களின் பணிப்பளு குறைந்தும், நேரமும் சேமிக்கப்படும். திருவண்ணாமலை நகராட்சியில் தினமும் அனைத்து வகையிலும் சராசரியாக 55 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.